பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 07 செவ்வாய்க்கிழமை 20.04.2021 கதிர் 34

## விஜேதாஸவின் மகன் பொலிஸாரால் கைது!

ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷவின் மகன் கைதுசெய்யப் பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இராஜகிரிய பிரதேசத்தில் வாகன விபத்து ஒன்றை ஏற்படுத்திய குற்றச்சாட்டிலேயே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

2

# மாகாண சபைத் தேர்தல்களை தாமதமின்றி நடத்த வேண்டும்

## இலங்கையிடம் இந்தியா வலியுறுத்து



**இலங்கை அரசு அதிகாரப் பகிர்வு தொடர்பான கடமைகளை நிறைவேற்றுவதற்கான சர்வதேச சமூகத்தின் அழைப்பை, மாகாண சபைத் தேர்தல்களை முன்கூட்டியே நடத்துவதன் ஊடாக ஆதரிக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.**

**இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தம், அனைத்து மாகாண சபைகளும் திறம்பட செயற்பட முடியும் என்பதை உறுதி செய்வதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் தம்பித்துரைக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.**

2

## பருத்தித்துறையில் வாள்வெட்டு ஒருவர் மரணம்; ஐவர் படுகாயம்



**(ந.லோகதயாளன், எஸ்,நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், ஏப்.20

யாழ்., வடமராட்சி, பருத்தித்துறை - அல்வாய் வடக்கில் உறவினர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் குடும்பஸ்தர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார். அதேவேளை, இந்தச் சம்பவத்தில் 5 பேர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான முருகராசா கௌசிகன் (வயது 31) என்பவரே உயிரிழந்துள்ளார்.

2

கொரோனாவின் பிடியிலிருந்து

## மன்மோகன் மீண்டெழ மஹிந்த பிரார்த்தனை



கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்று வரும் இந்தியாவின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் விரைவில் குணமடையப் பிரார்த்திப்பதாக இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

88 வயதான மன்மோகன் சிங்குக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதையடுத்து, அவருக்கு நடத்தப்பட்ட கொரோனாப் பரிசோதனையில்

2

## கொழும்பிலுள்ள அரச வங்கியில் 53 ஊழியர்களுக்குக் கொரோனா

### அன்டிஜன் பரிசோதனைகள் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள அரசவங்கிஒன்றின் 53 ஊழியர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

இதையடுத்து அவர்களுடன் தொடர்பைப் பேணிய 225 பேருக்குக் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனிடையே சமூகத்தில், கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களை அடையாளம் காண்பதற்காக இன்று முதல் மீண்டும் எழுந்தமானமாக கொரோனா பரிசோதனைகளை சுகாதார தரப்பு ஆரம்பித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு நகரில் மேற்கொள்ளப்பட்ட எழுந்தமானமான பரிசோதனைகளின்போது 18 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது

2

## மே தினப் பேரணிகள் இம்முறை வேண்டாம்

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கம் கோரிக்கை

இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கம் மீண்டும் அதிகரித்து வருவதால் இம்முறை மே தினப் பேரணிகளை நடத்த வேண்டாம் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கம் அரசியல் கட்சிகள் மற்றும் நிபுணர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் பொது மக்கள் சுகாதாரப் பாதுகாப்பின்றி நடந்து கொண்டமையால், எதிர்வரும் நாள்களில் கொரோனா வைரஸ் அதிகளவில் பரவும் ஆபத்து இருக்கின்றது என அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இந்த நேரத்தில், நாட்டில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து வருவதற்கான அறிகுறிகள் எங்களுக்குக் காட்டப்பட்டுள்ளமையால், எம்மால் எந்தவொரு ஆபத்தான விடயங்களையும் எடுக்க முடியாது.

எனவே, இம்முறை மே தினக் கூட்டங்களை நடத்தினால் இந்த நிலைமை மிக மோசமாகும் என்பதால் எந்தவொரு பேரணிகளையோ, கூட்டங்களையோ நடத்த வேண்டாம் என்று

2

## மே தினக் கூட்டம்: தனிவழியில் சு.க.



மே தினக் கூட்டத்தை தனியாக நடத்துவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது என அந்தக் கட்சியின் பொதுச்செயலாளரான இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் கட்சியின் தலைவர் மைத்திரிபாலசிறிசேன இன்று இடம்பெற்ற மத்திய குழு உறுப்பினர்களுடனான

2

# அடுத்து வரும் 3 வாரங்கள் தீர்மானமிக்கவை!

## சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு இராணுவத் தளபதி கோரிக்கை



இலங்கையில் அடுத்த மூன்று வாரங்கள் தீர்மானமிக்கவை என்பதால் தமிழ்-சிங்களப்புத்தாண்டுவிடுமுறைக்குப் பிறகு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வேலைக்கு வருபவர்கள் அனைவரும் கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி, முகக்கவசங்களை அணிவது, சமூக இடைவெளியைப் பேணுவது, பணியிடங்களிலும், பொது இடங்களிலும் முறையான சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

கடந்த வாரத்தில் பெரும்பான்மையான மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களின்படி நடந்துகொள்வதை நாங்கள் அவதானித்தோம். ஆனால், இவற்றைப் பின்பற்றாத ஒரு சிறிய குழு இருக்கலாம். கொரோனாவின் இரண்டாவது அலை ஒருவரிடமிருந்து பரவி நாடு முழுவதும் 90 ஆயிரத்துக்கும் அதிகமானோரைப் பாதிப்புக்குள்ளாக்கியது

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## கொழும்பிலுள்ள அரச வங்கியில்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனக் கொழும்பு மாநகர சபையின் தொற்று நோய் தடுப்பு விசேட நிபுணர் வைத்தியர் தினுகா குருகே தெரிவித்தார்.

இதனிடையே குருநாகல் பகுதியில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வருகின்றது எனச் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

பிலியந்தலப் பகுதியில் எழுந்தமானமாக மேற்கொள்ளப்பட்ட 130 பி.சி.ஆர். பரிசோதனைகளின்போது 31 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, பண்டிகைக்காலத்தை தொடர்ந்து இலங்கையில் கொரோனாவின் மூன்றாவது அலை உருவாகுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் இன்று இதுவரை 604 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளதையடுத்து மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 97 ஆயிரத்து 105 ஆக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 3 ஆயிரத்து 111 பேர் சிகிச்சை பெற்று வரும் நிலையில், தொற்று காரணமாக இதுவரை 620 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்மோகன் மீண்டெழ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, புதுடில்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் உள்ள கொரோனா விசேட சிகிச்சை மையத்தில் சிறப்பு மருத்துவக் குழு அவருக்குச் சிகிச்சையளித்து வருகின்றது.

அவர் நல்ல உடல் நிலையில் இருக்கின்றார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், மன்மோகன் சிங் விரைவில் நலம் பெற வேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

குறித்த பதிவில், மன்மோகன் சிங் விரைவாகக் குணமடையப் பிரார்த்திப்பதாகவும், அவருக்கு நல்ல ஆரோக்கியமும், முழுமையான மற்றும் விரைவான நலமும் கிடைக்க விரும்புவதாகவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## விஜேதாஸவின் மகன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றிரவு இராஜகிரியப் பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விஜேதாஸ ராஜபக்ஷவின் மகன் ராகித ராஜபக்ஷவும் விபத்தில் காயமடைந்து, தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## மே தினப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனைத்து அரசியல் கட்சிகளையும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

இதற்கிடையில், கொரோனா வைரஸின்பரவலைப்பொறுத்தவரைஇலங்கை மோசமான ஒரு கட்டத்தில் இருக்கின்றது. தமிழ் - சிங்களப் புத்தாண்டு காலத் தில் பொதுமக்கள் சுகாதாரப் பாதுகாப் பின்றி நடந்து கொண்டதால், கொரோனாப் பரவல் எதிர்வரும் தினங்களில் அதிகரிக்கக்கூடும்.

அதேபோல், பண்டிகைக் காலங்களில் மக்களின் மோசமான நடத்தையின் விளைவு இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் தெரியவரும். இது மிகவும் ஆபத்தானது. எனவே, கொரோனா வைரஸின் மூன்றாவது அலை உருவாகுவதை முறையாகக் கையாளாவிட்டால், நாட்டில் நிச்சயம் கொரோனாவின் மூன்றாவது அலை உருவாகுவதைத் தடுக்க முடியாது - என்றார்.

## பருத்தித்துறையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதே பகுதியைச் சேர்ந்த கமலராசா கமலசுதன், கமலராசா புஸ்பராஜ், கமலராசா புஸ்பமலர், சீவரத்தினம் தனேஷ் மற்றும் சிவனேஸ்வரன் சிவதர்ஷன் ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உறவினர்களுக்கிடையில் காசு கொடுக்கல் - வாங்கல் பிரச்சினை இன்று மதியம் வாய்த்தர்க்கமாக ஆரம்பித்து வாள்வெட்டில் முடிவடைந்துள்ளது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதலுடன் தொடர்புடைய நபர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளைப் பருத்தித்துறைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## மே தினக் கூட்டம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் சாதாரண சம்பிரதாயமாக ஒவ்வொரு முறையும் தனித்தே மே தினத்தைக் கொண்டாடி வருகின்றோம். அந்தவகையிலேயே இம்முறையும் தனித்து மே தினத்தை கொண்டாட முடிவெடுத்துள்ளோம்.

இந்த மே தினக் கொண்டாட்டத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும், அரசுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றோம். அதற்கான அழைப்பிதழ் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

அனைவருக்கும் தொழிலாளர் தினத்தைக் கொண்டாடுவதற்கான உரிமையிருக்கின்றது. அதற்கமையவே இந்தத் தீர்மானத்தை எடுத்தோம். எமது கட்சிக்குக் கீழுள்ள தொழிற்சங்கங்களின் வேண்டுகோளுக்கு இணங்க இந்தத் தீர்மானத்தை எடுத்தோம்.

எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மே தினக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கலந்துகொள்வார் - என்றார்.

## அடுத்து வரும்....

எங்களுக்கு அத்தகைய அனுபவம் இருந்தது. மற்ற நாடுகளில் நோயாளிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும்போது இந்த நாட்டு மக்களைக் கொரோனா வைரஸிலிருந்து பாதுகாக்கின்றோம்.

தமிழ் - சிங்களப் புத்தாண்டின்போது, நாங்கள் பல கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை. ஆனால், சில தடைகள் விதிக்கப்பட்டன. ஏனெனில் இது அவசியமானது. சிலர் அவற்றைப் பொருட்படுத்தாமல் சுதந்திரத்தை அனுபவிக்க முயன்றனர். நோய் பரவுவதைத் தடுக்கப் பொது ஒத்துழைப்பு முக்கியமானது -என்றார்.

## மாகாண சபைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து தம்பித்துரை எம்.பி. இலங்கை தமிழர்கள் பிரச்சினைகள் தொடர்பாக எழுப்பிய கேள்விக்கே, இந்திய வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகள் மதிக்கப்பட வேண்டும் என்ற பலமான அறிக்கையைத் தொடர்ந்தே, இந்தியா வாக்களிப்பில்இருந்துவிலகிக்கொண்டது எனவும் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்கள் முழுமையாகப் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்தியா முன்னெடுக்கும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் பதிலளித்துள்ளார்.


வேலைக்கு ஆள் தேவை

பிரபல கம்பனி உற்பத்தி விற்பனையாள் தேவை. சம்பளம் நேரடியாக பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு
0769903620
0769903611





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

# ஜே.ஆர். கால முன்னுதாரணம்

கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழு சட்ட மூலத்தின் செல்லுபடித் தன்மை தொடர்பில் உயர்நீதிமன்றம் நடத்தும் விசாரணை தொடர்கின்றது.

இந்தச் சட்ட மூலத்திற்கு எதிராக மொத்தம் 19 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள காரணத்தினால், இந்தச் சட்ட மூலம் தொடர்பில் நீண்ட விசாரணை ஒன்றை நடத்த வேண்டிய நிலைமை உயர்நீதிமன்றுக்கு.

இந்த நாட்டுக்குள், நாட்டினது நீதிமன்றத்தினதும், நாடாளுமன்றத்தினதும் நியாயாதிக்க விடயங்களுக்கு அப்பாற் செயற்படும் அதிகாரமுடைய ஓர் ஆணைக் குழுவை ஸ்தாபிப்பதற்கு இந்தச் சட்ட மூலம் வழி செய்வதால், நாட்டை ஒட்டி தனியான ஒரு நாடு உருவாவதற்கு இடமளிப்பதாக அது உள்ளது என்று நேற்று இந்த மனு மீதான விசாரணையில் ஆரம்ப வாதங்களை சமர்ப்பணம் செய்த – மாற்றுக் கொள்கைகள் மையத்தின் சார்பில் முன்னிலையான – ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார்.

அதையடுத்து வாதிட்ட மற்றொரு ஜனாதிபதி சட்டத்தரணியான சுமந்திரன், தமக்கு முன்னர் சமர்ப்பணம் செய்த கனகேஸ்வரனின் கருத்துபடி, நாட்டுக்குள் அடங்காத பிறிதொரு பிராந்தியத்தின் சட்ட வலிமை பற்றி இங்கு பேசப்படுவதால், தனது நாடு அல்லாத இன்னொரு பிரதேசத்தின் சட்டம் குறித்து இலங்கை உயர்நீதிமன்றம் ஆராயும் முதல் சந்தர்ப்பம் இது என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

சட்டத்தரணிகளின் இந்த வாதங்கள் தொடர்பில் தனது முடிவை – தீர்ப்பை – இன்னும் சில தினங்களில் உயர்நீதிமன்றம் வெளியிடும் போது நாம் அறியலாம்.

ஆனால், நாட்டில் அந்நிய செலாவணி முதலீட்டை ஊக்குவிக்கவும், நாட்டின் பொருளாதார நிலைமையை மேம்படுத்தவும் இத்தகைய தனியான பொருளாதார வலயங்களை விசேட சட்ட ஏற்பாட்டு அதிகாரங்களுடன் உருவாக்குவது புதுமையான விடயம் அல்ல. உலகின் பல நாடுகளிலும் உள்ளதுதான் இது. ஏன் இலங்கைக்குக் கூட இது புதிதல்ல. இப்படி ஒரு தனியான பிராந்தியத்தை – விசேட அதிகாரங்கள், தனித்துவச் சிறப்பு ஏற்பாடுகள், உரிமைகளுடனும் விசேட வரி விலக்கு போன்ற வசதிகளுடனும் இந்த நாட்டில் முதன்முதலில் உருவாக்கியவர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா.

1970 முதல் 1977 வரை சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு கொடிகட்டிப் பறந்த காலம் அது. அச்சமயம் மிக சொற்ப ஆசனங்களுடன் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா தமது கட்சியை மீண்டும் அரசுக் கட்டில் ஏற்றுவதற்குப் பகீரதப் பிரயத்தனங்களில் ஈடுபட்டிருந்தார்.

தமது அடுத்த அரசில் நாட்டின் பொருளாதாரத்தை ஒரேயடியாக உயர்த்தி இலங்கையைப் பொன்கொழிக்கும் பூமியாக மாற்றும் திட்டத்தைத் தான் தேர்தலின்போது கடைசிச் சமயத்தில் அறிவிப்பார் என 1977 பொதுத் தேர்தலின் போது அவர் பிரகடனப்படுத்தினார். அதன்படி ‘விசால கொழும்பு பொருளாதார ஆணைக்குழு’ திட்டத்தை அவர் அறிவித்தார்.

தனியான வர்த்தக வலயங்களை நிறுவி பொருள்களை வரி விதிப்பின்றி உற்பத்தி செய்து நேரடியாக வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் அந்தத் திட்டத்தின்படி அதற்குரிய ஆணைக் குழுவை தமது தேர்தல் அறிவிப்புக்கு அமைய, தாம் அத்தேர்தலில் வென்று பிரதமரானதும் கொண்டு வந்தார் அவர்.

1972 ஆம் ஆண்டின் குடியரசு யாப்பே அப்போது நடைமுறையில் இருந்தது. 1978 ஆம் ஆண்டின் தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையையுடைய யாப்பு நடைமுறைக்கு வராத காலம்.

அச்சமயங்களில், முன்னைய யாப்பின் கீழ், அரசமைப்புத் தொடர்பான சர்ச்சைகள் குறித்து ஆராய்ந்து பரிந்துரைகளைச் செய்வதற்கு அரசமைப்பு கவுன்ஸிலில் ஒன்று தனியாக இருந்தது. ஆனால் அதன் பரிந்துரைகள், தீர்ப்புகள் அரசைக் கட்டுப்படுத்துவன அல்ல (Non Binding).

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் விசால கொழும்பு பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்துக்கு எதிராகவும், இப்போது போன்று பல மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. விசாரணையின் முடிவில் சட்டமூலத்தில் இருந்த பல ஒட்டைகள், தவறுகள், பிழைகளை அந்தக் கவுன்ஸிலில் சுட்டிக்காட்டி பரிந்துரைகளைச் சமர்ப்பித்தார்.

அந்தப் பரிந்துரைகளை தமது அரசைக் கட்டுப்படுத்தா எனினும், அவை அனைத்தையும் ஏற்று சட்ட மூலத்தில் உரிய மாற்றங்களைச் செய்து அந்த ஆணைக்குழுவை ஏற்படுத்தினார் அப்போதைய பிரதமர் ஜெயவர்த்தனா. அந்த ஆணைக் குழுவே ஏறத்தாழ சுதந்திர வர்த்தக வலயமாக கட்டுநாயக்காவைச் சுற்றிய பிரதேசத்தில் இப்போதும் இயங்கி வருகின்றது.

ஜே.ஆர். ஜெயவர்த்தனா காலத்தின் அப்போதைய நடவடிக்கை முறை இப்போது ஒரு வரலாற்று முன்காட்டி நிகழ்வு.

தற்போதைய கொழும்புத் துறைமுக நகர் ஆணைக்குழு சட்ட மூலத்தின் சர்ச்சையை ஒட்டிய தீர்வுக்கு அந்த முன்னுதாரணம் நல்ல வழிகாட்டலாக இருக்கக் கூடும்.

# 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கல் இந்த மாத இறுதிக்குள் நிறைவடையும்

## இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு



இந்த வார இறுதிக்குள் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் நடவடிக்கை நிறைவடையுமென இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை இலங்கை முழுவதும் அரசாங்கம் வழங்கி வந்தது.

ஆனாலும் நாடு முழுவதும் பெருநாள் முன்கூட்டியே குறித்த நடவடிக்கையை மேற்கொள்ள முடியாத போதிலும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்குத் தொடர்ந்து வழங்கி வருகின்றது.

இந்நிலையிலேயே இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, பத்தரமுல்லயில் நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கடந்த வெள்ளிக்கிழமைக்குள் 23 லட்சம் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இந்த வார இறுதிக்குள் 33 லட்சம் குடும்பங்களுக்கு 28 லட்சம் ரூபா கொடுப்பனவை வழங்க அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும் கடந்த வெள்ளிக்கிழமை நிலைவரப்படி, 23 லட்சம் குடும்பங்களுக்கு 11 ஆயிரத்து 50 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது.

ஆனாலும் அதைப்பெற முடியாதவர்களுக்கு கடந்த திங்கள் முதல் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. ஆகையால் புதன்கிழமைக்குள் பிரதேச செயலாளர் ஊடாக அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் இந்த வார இறுதிக்குள் இந்தக் கொடுப்பன வழங்கும் நடவடிக்கை நிறைவடையுமென நம்புகின்றேன். – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ரஞ்சனுக்கு சிறப்பு மன்னிப்பு வழங்குவது தொடர்பில் கோட்டாவுடன் சஜித் பேச்சு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு சிறப்பு மன்னிப்பு வழங்குவது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை தொலைபேசியில் தொடர்பு கொண்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவின் உடல்நிலை திருப்திகரமாக இல்லை என சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியிடம் கூறினார் எனவும், சிறப்பு மன்னிப்பு வழங்குவது தொடர்பில் பரிசீலிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார்.

அங்குணுபெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை அண்மையில் சஜித் பிரேமதாஸ சந்தித்துப் பேசியிருந்தார். அத்துடன், அமைச்சர் நாமல் ராஜபக்ஷவும் ரஞ்சன் ராமநாயக்கவை சந்தித்து பேசியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 2 ஆவது டோஸ் தொடர்பான உண்மை நிலையை அரசு வெளிப்படுத்தவேண்டும்

## பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கம்

கொவிட் – 19 தடுப்பூசிகளின் இரண்டாவது அளவை வெளியிடுவதற்கான சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் உண்மையான நிலையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டுமென பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட பொது சுகாதார ஆய்வாளர்கள் சங்கம் தலைவர் உபுல் ரோஹண இவ்விடயம் தொடர்பாக மேலும் கூறியுள்ளவை வருமாறு –

அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசிகளின் இரண்டாவது அளவை வெளியிடுவது தொடர்பாக அரசாங்கம் இன்னும் அதிகாரபூர்வ அறிக்கையை வெளியிடவில்லை.

ஏப்ரல் 12 முதல் இரண்டாவது டோஸ் வெளியீடு தொடங்கும் என்று சுகாதார அதிகாரிகள் முன்னர் அறிவித்தனர். இருப்பினும், அவர்கள் இப்போது இது தொடர்பில் ஒரு தெளிவான அறிக்கையை வெளியிடத் தவறிவிட்டனர்.

அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியில் சில தெளிவற்ற தன்மைகள் இருக்கின்றது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அது தடுப்பூசியின் முதல் அளவை வழங்கியவர்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை முதல் டோஸ் வழங்கப்பட்ட அனைவருக்கும், இரண்டாவது டோஸ் கொடுக்க போதுமான தடுப்பூசிகள் இல்லை. இந்தத் தடுப்பூசித் திட்டம் தற்போது ஒரு சிக்கலான நிலையில் உள்ளது.

ஆகவே, சந்தேகங்களைத் தீர்ப்பதற்காகத் தடுப்பூசித் திட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக உத்தியோகபூர்வ அறிக்கை ஒன்றை அரசாங்கம் வெளியிட வேண்டும்’ என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 97 ஆயிரத்தைக் கடந்தது கொரோனாத் தொற்றாளர்

கொழும்பு, ஏப்.20

இலங்கையில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 309 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றுஉறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 97 ஆயிரத்து 105ஆக அதிகரித்துள்ளது.

அவர்களில், 93 ஆயிரத்து 374 பேர் கொரோனாத் தொற்றில் இருந்து குணமடைந்துள்ள நிலையில், தொற்றுக்கு உள்ளான 3 ஆயிரத்து 111 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேநேரம், கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் இரு மரணங்கள் பதிவாகியுள்ளன என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

மஹறவ மற்றும் மாரஸ்சன பிரதேசங்களிலேயே இந்த மரணங்கள் பதிவாகியுள்ளமையுடன், 58 வயதுடைய பெண்ணொருவரும் 84 வயதுடைய ஆணொருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து, இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 620 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# கொரோனாவைக் கட்டுப்படுத்த மாநில அரசுகள் மும்முரம் அடுத்தடுத்துப் பிறப்பிக்கப்படும் ஊரடங்கு உத்தரவுகள்

கேரள மாநிலத்தில் இன்று முதல் இரவு ஊரடங்கு அமுல்படுத்தப்படுவதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது. இரவு 9 மணி முதல் காலை 6 மணி வரை இரவு நேர ஊரடங்கு அமுலில் இருக்கும் என மாநில அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே டெல்லியில் வரும் இருபத்தைந்தாம் திகதி வரை முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரையும், பஞ்சாப் மாநிலத்தில் இரவு 8 மணி முதல் காலை 5 மணி வரையும் இரவு நேர ஊரடங்கு அமுலாகின்றது எனஅந்த மாநில முதல்வர்கள் அறிவித்துள்ளனர்.

இந்தியாவில் அண்மைய நாள்களில் அதிகரித்து வரும் கொரோனா பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அடுத்த சில நாள்களில் மேலும் பல இடங்களில் முழுமையாகவோ பகுதியாகவோ ஊரடங்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்படலாம் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.



## ரெம்டெசிவிர் மருந்தின் பாவனை குறித்து தெளிவுபடுத்தினார் டெல்லி எய்ம்ஸ் இயக்குநர்

நாட்டில்நாளுக்குநாள்கொரோனாஎண்ணிக்கை உயர்ந்து வரும் நிலையில் தடுப்பூசிகளைச் செலுத்தும் பணிகளும் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றன என செய்திகள் வெளியாகின்றன. கொரோனா நோயாளிகளுக்கான ரெம்டெசிவிர் மருந்துகளுக்கான கேள்வி பல மாநிலங்களிலும் அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதனால், பல இடங்களில் இந்த மருந்துகளை வாங்கிப் பதுக்கல் செய்யும் சம்பவங்களும் நடக்கின்றன என முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறைந்த விலைக்கு அவற்றை வாங்கி கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் அவலமும் காணப்படுகிறது என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

இந்நிலையில், டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனை இயக்குநர் ரன்தீப் குலேரியா, இன்று ஊடகவியலாளர்ளோடு உரையாடியபோது, ரெம்டெசிவிர் கொரோனாவுக்கான தீர்வு ஏற்படுத்தும் மருந்து இல்லை என அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியம். அது இறப்புகளைக் குறைக்கும் மருந்தும் இல்லை. நம்மிடம் கொரோனா வைரஸுக்கு எதிரான நேரடி எதிர்ப்பு மருந்துகள் இல்லை. எனவே, இதனைப் பயன்படுத்தலாம் என்று கூறுகிறோம்.

நோய் அறிகுறியற்ற நபர்கள் அல்லது லேசான அறிகுறிகளைக் கொண்டவர்களுக்கு ஆரம்பத்திலேயே இதனைக் கொடுப்பதில் எந்தப் பயனும் இல்லை. ரெம்டெசிவிர் மருந்தானது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, ஒக்சிஜன் அளவு குறைந்த நோயாளி களுக்கு மட்டுமே கொடுக்கப்பட வேண்டும். தவிர, எக்ஸ்ரே அல்லது சி.டி. ஸ்கேன் செய்த பின்னர் நெஞ்சுக்குள் வைரஸின் ஊடுருவல் உள்ளவர்களுக்கு இது கொடுக்கப்பட வேண்டும் என்று தெளிவு படுத்தியுள்ளார்.

## கொரோனா விடயத்தில் அரசியல் உள்நோக்கமின்றி உதவுங்கள்!

### மத்திய அரசிடம் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்

கொரோனா விடயத்தில் அரசியல் உள்நோக்கமின்றி மாநில அரசுகளுக்கு உதவிட வேண்டுமென, மத்திய அரசை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள அவர், 'அதிவேகமாகப் பரவி வரும் கொரோனாவின் 2 ஆம் அலையை தமிழக அரசு கட்டுப்படுத்திட வேண்டும். இனியும் மக்கள் அலட்சியத்துடன் செயற்படக் கூடாது. அரசு விதித்துள்ள கட்டுப்பாடுகளை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

அரசு மருத்துவமனைகளைப் போலவே, தனியார் மருத்துவமனைகளையும் கொரோனா சிகிச்சைக்காகத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். கொரோனா பரவாமல் தடுப்பது, பாதிக்கப்பட்டவர்களைக் காப்பது, வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவது ஆகிய மூன்றையும் முக்கிய கடமைகளாகக் கொண்டு அரசுகள் செயல்பட வேண்டும்' என தனது அறிக்கையில் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.



## கொரோனாத் தடுப்பூசிக்கான சோதனைக்கு அனுமதி கோரியது ஜோன்சன் அண்ட் ஜோன்சன்




ஜோன்சன் அண்ட் ஜோன்சன் நிறுவனம் தான் தயாரித்துள்ள கொரோனாவுக்கான தடுப்பூசியின் 3 ஆவது கட்டச் சோதனையை இந்தியாவில் மேற்கொள்ள மத்திய அரசிடம் அனுமதி கோரியுள்ளது.

ஜோன்சன் அண்ட் ஜோன்சன் நிறுவனம் ஒரே ஒரு முறையில் செலுத்தத்தக்க கொரோனாவுக்கான தடுப்பூசியைத் தயாரித்துள்ளது. இந்தத் தடுப்பூசி சில நாடுகளில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், இந்தியாவிலும் அதனைப் பயன்படுத்த அந்த நிறுவனம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கு முன்னதாக, இந்தியாவில் 3 ஆவது கட்டப் பரிசோதனைகளை மேற்கொள்வதோடு இறக்குமதி உரிமம் பெறுவதற்காகவும் மத்திய மருந்துக் கட்டுப்பாட்டு நிறுவனத்திற்கு ஜோன்சன் அண்ட் ஜோன்சன் விண்ணப்பித்துள்ளது. தடுப்பூசிகளுக்கான தேவை கடுமையாக அதிகரித்துள்ள நிலையில் இதற்கான ஒப்புதல் விரைவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் ஏற்கனவே கொவோக்சின், கொவிஷீல்ட் ஆகிய தடுப்பூசிகள் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் பயன்பாட்டுக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தடுப்பூசி குறித்த சர்ச்சைக் கருத்து மன்சூர் அலிகான் மீது 5 பிரிவுகளில் வழக்குப் பதிவு



கொரோனாத் தடுப்பூசி குறித்து சர்ச்சைக் கருத்துக்களை வெளியிட்டார் என புகார் அளிக்கப்பட்ட விவகாரத்தில், நடிகர் மன்சூர் அலிகான் மீது 5 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் கொரோனா பரவலைத் தடுக்க 45 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகிறது. தடுப்பூசி தொடர்பாக பல்வேறு கருத்தாடல்கள் ஊடகங்களிலும் மக்களிடத்திலும் நிகழ்ந்து வருகின்றன.

முன்னதாக, நடிகர் விவேக் மரண விவகாரத்தில் கொரோனாத் தடுப்பூசி பற்றி அவதூறு பரப்பினார் என மன்சூர் அலிகான் மீது சென்னை மாநகராட்சி சார்பில் காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டது. இதனையடுத்து அவர் சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை கோரி மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்தநிலையில், புகாரின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும் முயற்சியாக வடபழனி காவல்துறையினர் மன்சூர் அலிகான் மீது கலகம் செய்ய தூண்டிவிடுதல், உயிருக்கு ஆபத்தான தொற்றைப் பரப்பக்கூடிய செயலில் ஈடுபடுதல், பேரிடர் மேலாண்மைச் சட்டம், தொற்று நோய்த் தடுப்புச் சட்டம் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

மன்சூர் தாக்கல் செய்த முன் பிணை மனுவில், 'கொரோனாத் தடுப்பூசி போடக் கூடாது என்று சொல்லவில்லை. தடுப்பூசியைப் போடுமாறு கட்டாயப்படுத்தக் கூடாது என்றுதான் கூறினேன்' என அவர் விளக்கம் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மன்மோகன் சிங் நலம் பெற பிரதமர் மோடி டுவிட்டரில் பதிவு

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளதையடுத்து அவர் விரைவில் நலமுடன் திரும்ப வேண்டுமென பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

கொரோனாவின் இரண்டாவது அலை வேகமாகப் பரவிவரும் நிலையில் பொது மக்கள் மட்டுமல்லாமல் சினிமாத்துறையினர், அரசியல்வாதிகள், விளையாட்டு வீர வீராங்கனைகள் என பலதுறைகளின் பிரபலங்களும் பாதிப்படைந்து வருகின்றனர். இந்நிலையில், முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளதையடுத்து டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து பிரதமர் மோடி தனது டுவிட்டர் பக்கத்தில், 'முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் நல்ல ஆரோக்கியத்துடன் விரைவில் மீண்டு வரவேண்டும்' என்று பதிவிட்டுள்ளார். ராகுல் காந்தியும் பிரியங்கா காந்தியும் மன்மோகன் சிங் குணமாக தமது ஆதரவான வார்த்தைகளை வெளியிட்டுள்ளனர்.



## டெல்லியில் நேற்று இரவு முதல் 7 நாள்களுக்கு முழு ஊரடங்கு

டெல்லியில் நாளுக்கு நாள் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 25 ஆயிரத்து 462 பேருக்குத் தொற்று கண்டறியப்பட்டுள்ளது, 161 பேர் உயிரிழந்துள்ளனர். எனவே, கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளை அரசு துரிதப்படுத்தி உள்ளது. அத்துடன், புதிய கட்டுப்பாடுகள் விதிப்பது பற்றி அரசு ஆலோசனை நடத்தி வந்தது.

இந்த சூழலில் புதிய கட்டுப்பாடுகளை டெல்லி முதல்வர் கெஜ்ரிவால் நேற்று அறிவித்தார். அவர் கூறியதாவது:-

டெல்லி இப்போது கொரோனா வைரஸின் நான்காவது அலையை எதிர்கொண்டு வருகிறது. தினமும் 25 ஆயிரம் பேருக்கு தொற்று கண்டறியப்படுகிறது. புதிய பாதிப்பு இதே நிலையில் நீடித்தால், சுகாதார கட்டமைப்பு சீர்குலைந்துவிடும். மருத்துவமனைகளில் படுக்கைகள் குறைவாகவே உள்ளன.

எனவே, கொரோனாப் பரவலை கட்டுப்படுத்துவதற்காக நேற்று இரவு 10 மணி முதல் வரும் திங்கட்கிழமை (ஏப்ரல் 26) காலை 6 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

அத்தியாவசிய சேவைகள், உணவு சேவைகள், மருத்துவ சேவைகள் தொடர்ந்து நடைபெறும். திருமண நிகழ்ச்சியில் 50 பேர் வரை மட்டும் பங்கேற்க அனுமதிக்கப்படும். இதற்காக தனித்தனியாக அனுமதி அட்டைகள் வழங்கப்படும். வழிகாட்டு நெறிமுறைகள் தொடர்பான விரிவான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்.- இவ்வாறு அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க முன்னாள் துணை அதிபர் காலமானார்



அமெரிக்காவின் 39-ஆவது அதிபராக பதவிவகித்தவர் ஜிம்மி கார்ட்டர். இவர் 1977 முதல் 1981 வரை அமெரிக்க அதிபராக செயல்பட்டார். இந்த காலகட்டத்தில் 1977 முதல் 1981 வரை அமெரிக்காவின் 42 ஆவது துணை அதிபராக செயல்பட்டவர் வால்டர் மண்டிலி.

மேலும், பில் கிளிங்டன் அதிபராக இருந்தபோது 1993 முதல் 1996 வரை வால்டர் மண்டிலி ஜப்பானுக்கான அமெரிக்க தூதராகவும் செயல் பட்டுள்ளார். வயது முதிர்வு காரணமாக அவர் அரசியலை விட்டு கடந்த ஆண்டுகளுக்கு முன்னர் விலகியிருந் தார்.

இந்நிலையில், 93 வயதான வால்டர் மண்டிலி இன்று உயிரிழந் தார். வால்டர் மண்டிலி வயது முதிர்வு காரண மாக உயிரிழந்துள்ளார்.

முன்னாள் துணை அதிபர் வால்டர் மண்டிலி உயிரிழந்துள்ள சம்பவத்திற்கு அவருடன் இணைந்து பணியாற்றிய முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டர் இரங்கல் தெரிவித்துள் ளார். மேலும், வால்டர் மண் டிலி மறைவுக்கு முன்னாள் அதிபர் ஒபாமா, தற்போதைய துணை அதிபர் கமலா ஹாரிஸ் உள்ளிட்ட பல்வேறு தலை வர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# எண்ணெய் லொரி வெடித்து சிதறி நைஜீரியாவில் 12 பேர் உயிரிழப்பு




ஆபிரிக்க நாடான நைஜீரியாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள பெனூ மகா ணத்தில் கச்சா எண்ணெய்யை ஏற்றிக்கொண்டு தாங்கி லொறி ஒன்று சென்று கொண்டிருந் தது.

இந்த லாரி ஒஷிக்புடு என்ற கிராமத்துக்கு அருகே சென்று கொண்டிருந்தபோது திடீ ரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் சாலையில் தறிகெட்டு ஓடிய லொரி கிராமத்துக்குள் புகுந்து கவிழ்ந் தது. இதில் லொறியில் இருந்த எண்ணெய் முழுவதும் தரையில் கொட்டியது. இதனால் ராங்கி லொறியில் தீ பிடித்து வெடித்துச் சிதறியது. இந்த தீ அருகில் உள்ள வீடுகளிலும் கடைகளிலும் பரவி கொழுந்துவிட்டு எரிந் தது.

இதில் வீடுகள் மற்றும் கடைகளில் இருந்த பலர் தீயில் சிக்கினர். இந்த கோர சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததும் தீயணைப்பு வீரர்கள் தீயணைப்பு வாகனங்களில் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

அவர்கள் பல மணி நேரம் போராடி தீயை முழுமையாகக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும் தீயின் கோரப்பிடியில் சிக்கி ஒரு பச்சிளம் குழந்தை, 3 பெண்கள் உட்பட 12 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் பலருக்கு பலத்த தீக்காயம் ஏற்பட் டது. அவர்கள் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரிகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டனர். இந்த விபத்துக்கான காரணம் என்ன என் பது உடனடியாக தெரியவராத நிலையில் இதுபற்றி தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருகின்றது என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கொரோனா பாதித்து குணமடைந்தவர்களுக்கு ஒரு டோஸ் போதும்? அமெரிக்க ஆய்வுத் தகவல்



கொரோனாத் தொற்று பாதித்து குணமடைந்தவர்க ளுக்கு ஒரு டோஸ் தடுப்பூ சியே போதுமானது என அமெரிக்காவில் நடத்தப் பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கி றது.

லாஸ் ஏஞ்சலஸில் Cedars-Sinai மருத்துவ மையத்தில் நடத்தப்பட்ட ஆய்வில், கொரோனா பாதித்து மீண்டவர்களுக்கு, ஒரு டோஸ் மூலம் உருவான எதிர்ப்பாற்றல், கொரோனா பாதிக்காதவர்களுக்கு இரண்டு டோஸ்கள் மூலம் உருவான எதிர்ப்பாற்றலுக்கு சமமாக இருந்தமை கண்டறியப்பட் டுள்ளது.

எனவே, கொரோனா பாதித்து மீண்டவர்கள் எனில், Pfizer அல்லது Moderna தடுப்பூசி ஒரு டோஸ் மட் டும் எடுத்துக் கொண்டாலே போதுமானது என அந்த ஆய்வு காட்டுவதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இதே கருத்தை இத்தாலிய ஆய்வு ஒன்றும் தெரிவிக் கிறது. ஜான்சன் அண்ட் ஜான்சன் மற்றும் அஸ்ட் ராஜெனகா தடுப்பூசிகளின் பாதுகாப்பு குறித்த தகவல் கள் எழுந்துள்ள நிலையிலும், தொற்று பாதித்து மீண் டவர்களுக்கு ஒரு டோஸ் போதுமானது என்றால் உலகளவில் 11 கோடி டோஸ் கள் சேமிக்கப்படும் என்ப தாலும் இந்த ஆய்வு முக் கியத்துவம் பெறு கிறது.

# அமெரிக்காவில் டெஸ்லா தானியங்கி கார் விபத்தில் சிக்கியதில் இருவர் உயிரிழப்பு



அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் ஓட்டுநர் இல்லா டெஸ்லா தானியங்கி கார் விபத்துக்குள்ளானதில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

ஹூஸ்டனுக்கு வடக்கே இரவு நேரத்தில் அதிவேகத்தில் சென்றுகொண்டிருந்த 2019 ஆம் ஆண்டு வெளியான எஸ் மொடல் டெஸ்லா கார், வளைய முயற்சிக்கும்போது சாலையிலிருந்து விலகி, மரத்தில் மோதி தீப்பிடித்து எரிந்தது.

இதில் காரின் ஓட்டுநர் இருக்கைக்கு அருகில் அமர்ந்திருந்தவரும், பின்புற இருக்கையில் அமர்ந்தி ருந்தவரும் உடல் கருகி உயிரிழந்தனர். விபத்து குறித்து காவல்துறையினர் விசாரணை நடத்திவருகின்றனர்.

கடந்த மார்ச் மாதத்தில் மாத்திரம் டெஸ்லா வாகனங்கள் விபத்துக்குள்ளாவது தொடர்பாக 27 விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன என அமெரிக்க வாகன பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சீனாவின் ஆன்ட் குழுமத்தில் இருந்து ஜக் மாவை வெளியேற்ற நடவடிக்கை



சீனாவின் ஆன்ட் குழுமத்தில் இருந்து ஜேக் மாவை வெளியேற்றும் வழிகள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

சீனாவின் மிகப்பெரிய மின்னணுப் பணப்பரிமாற்ற சேவை நிறுவமான ஆன்ட் குழுமம், தொழிலதிபர் ஜேக் மா என்பவரால் நிறுவப்பட்டது.

நூறு கோடிப் பயனாளர்களைக் கொண்ட இந்த நிறுவனத்தின் கட்டுப்பாட்டைச் சீன அரசு எடுத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

இதையடுத்து ஆன்ட் குழுமத்தில் ஜேக் மாவுக்கு உள்ள பங்கைத் திருப்பிக் கொடுத்து அவரை வெளியேற்றும் வழிகள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

ஏற்கனவே நவம்பரில் நடைபெற்ற கூட்டத்தில் ஆன்ட் குழுமத்தில் இருந்து வெளியேறி அதன் நிர்வாகத்தை அரசிடம் ஒப்படைக்க ஜேக் மா ஒப்புக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

# பொரிஸ் ஜோன்சனின் இந்திய பயணம் ரத்து



இந்தியக் குடியரசு தின விழாவில் பிரிட்டன் பிரதமர் பொரிஸ் ஜோன்சன் பங்கேற்க திட்டமிட்டிருந்தார். இருப்பினும் பிரிட்டனில் கொரோனா வைரஸின் 2வது அலை வீசியதால் அவரது இந்திய பயணம் இரத்து செய்யப்பட்டது. இதனையடுத்து வரும் 25 ஆம் திகதி பொரிஸ் ஜோன்சன் இந்தியா வருவார் என அறிவிக்கப்பட்டது. டெல்லி மட்டுமின்றி பல்வேறு மாநிலங் களுக்கும் சுற்றுப்பயணம் செய்யும் அவர், தொழிலதிபர்களுடன் கலந்துரையாடுவார் என்று அறிவிக்கப் பட்டிருந்தது.

இந்நிலையில் இந்தியாவில் தற்போது கொரோனா வைரஸின் இரண்டாவது அலை அதிவேகமாக பரவி வருகிறது. அது மட்டுமன்றி இந்தியாவில் இரட்டை மரபணு மாற்றமடைந்த புதிய வகை கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

எனவே பிரதமர் பொரிஸ் ஜோன்சன் தனது இந் திய பயணத்தை ரத்து செய்ய வேண்டும் என முக்கிய எதிர்க்கட்சியான தொழிலாளர் கட்சி கோரிக்கை விடுத்தது. இதுகுறித்து தொழிலாளர் கட்சியின் செயலாளர் ஸ்டீவ் ரீட் கூறுகையில், இந்தியாவுக்கு பயணிப்பதை விட காணொளிக் காட்சி மூலமாக சந்திப்புகளை நடத்தலாம் என்றார்.

இந்த யோசனை மற்றும் இந்தியாவில் உள்ள கொரோனா நிலைவரத்தை பரிசீலனை செய்த போரிஸ் ஜான்சன், தனது இந்திய பயணத்தை ரத்து செய்துள்ளார்.

இந்தியாவில் தற்போதைய கொரோனா வைரஸ் சூழலில், பிரதமர் பொரிஸ் ஜோன்சன் அடுத்த வாரம் இந்தியாவிற்கு பயணம் மேற்கொள்ள முடியாது என இரு நாட்டு அரசுகள் சார்பில் கூட்டறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

'நேரடி சந்திப்புக்கு பதிலாக, பிரதமர்கள் மோடி மற்றும் பொரிஸ் ஜோன்சன் இந்த மாத இறுதியில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசுவார்கள். அப்போது பிரிட்டன் மற்றும் இந்தியா எதிர்காலத்தில் இணைந்து மேற்கொள்ளும் இலட்சிய திட்டங்களை செயல்படுத்த ஒப்புக் கொண்டு தொடங்குவார்கள். இதைத் தாண்டி அவர்கள் வழக்கமான தொடர்பில் இருப்பார்கள். மேலும் இந்த ஆண்டின் பிற்பகுதியில் நேரில் சந்திக்க திட்டமிடுவார்கள்' என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வரும் நாள்களில் இரு நாடுகளிடையே காணொளி வாயிலாக கூட்டம் நடத்தப்பட உள்ளது என இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு கடுகதி ரயில் சேவையினை மட்டக்களப்பிலிருந்து ஆரம்பிக்க பரிசீலனை

பொலன்னறுவை முதல் கொழும்பு வரையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் கடுகதி ரயில் சேவையினை மட்டக்களப்பி லிருந்து ஆரம்பிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக் கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று செவ்வாய்கிழமை இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அர சாங்கத்தின் காலப்பகுதியில் பொலன்னறுவை முதல் கொழும்பு வரையிலான கடுகதி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த ரயில் சேவையானது பொறுநறுவையிலிருந்து அதிகாலை 3 மணிக்கு புறப்பட்டு காலை 9 மணிக்கு கொழும்பினை வந்தடைகின்றது. அதேபோன்று கொழும்பி லிருந்து மாலை 3.15 மணிக்கு புறப்பட்டு 7.15 மணிக்கு பொலன்னறுவையினை சென்றடைகின்றது.

இந்தநிலையில் அமைச்சர் அவர்களே அதிகாலை 3 மணிக்கு பொலன்னறுவையில் இருந்து குறித்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு சற்று முன்னராக மட்டக்களப்பில் இருந்து ஆரம்பிக்க முடியுமா என்பதனை ஆராயந்து பாருங்கள்.

அதிகமான நேரங்களில் காலியான இருக்கைகளுடன் னேயே ரயில் கொழும்பினை சென்றடைகின்றது. பொலன்னறு வையில் இருந்து சேவையினை ஆரம்பிக்கின்றமை காரண மாகவே குறைந்தளவானர்கள் பயணிக்கின்றனர்.

எனவே பொலன்னறுவைக்கான ஆசனங்களை ஒதுக்கீடு செய்ததன் பின்னராக, பொலன்னறுவையில் இருந்து குறித்த ரயில் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு சற்று முன்னராக மட்டக் களப்பில் இருந்து ஆரம்பிக்க முடியுமா?

ஏனெனில் தற்போது மட்டக்களப்பிலிருந்து கொழும்பிற்கு வரும் ரயில் பயணிப்போர் இரண்டு நாள்களாவது கொழும்பில் தங்கியிருந்து தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது.

எனினும் காலை 9 மணிக்கு கொழும்பிற்கு வருகை தந் தால், தங்களது கடமைகளை பூர்த்தி செய்துகொண்டதன் பின் னர் மீண்டும் அன்றைய தினம் மாலையே மட்டக்களப்பிற்கு திரும்பி செல்ல முடியும்.

நான் பொலன்னறுவை - கொழும்பிற்கான ரயில் சேவைக் கான நேரத்தினை மாற்றுமாறு கூறவில்லை அந்த நேரத் திற்கு முன்னராக மட்டக்களப்பிலிருந்து ஆரம்பிக்க முடியுமா என்றே கேட்கின்றேன். என்றார்.

இதற்கு பதிலளித்த போக்குவரத்து அமைச்சர், அதிகாரிக ளுடன் பேசிவிட்டு உரிய பதிலினை வழங்கிறேன் எனத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் கருத்து வெளியிட்ட இரா. சாணக்கியன், அதிகாரிகள் இதனை செய்வதற்கு தயாராக இருக்கின்றனர். எனவே வெள்ளோட்ட முறையில் இதனை செய்து பார்க்க முடியுமா? எனவும் கேள்வி எழுப்பியிருந்தார்.

# பால் புரைக்கேறி கைக் குழந்தை உயிரிழப்பு

திருகோணமலை தம்பலகாமம் பகுதி யில் தாய்ப்பால் புரைக்கேறி 25 நாள் கைக்குழந்தை உயிரிழந்த சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பொற்கேணி பகுதியில் தாய் பிள் ளைக்கு பால் கொடுத்துவிட்டு தூங்குவ தற்காக சென்ற பின்னர் 12 மணி யளவில் குழந்தையை பார்த்தபோது குழந்தையின் வாய் மற்றும் மூக்கு பகுதியில் இருந்து நுரை வழிந்த நிலையில் கிடந்தது எனவும் இதனையடுத்து தம்பல காமம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தையடுத்து குழந்தை உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை யில் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த கைக் குழந் தையின் சடலத்தை திருகோணமலை திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எஸ். எம். ரூமி பார்வையிட்ட நிலையில் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு கட்டளை யிட்டார்.

இதேவேளை, குழந்தையின் சடலம் திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது எனவும் பிரேத பரிசோதனை முடிவடைந் தவுடன் உறவினர்களிடம் குழந்தை யின் சடலம் ஒப்படைக்கப்படவுள்ளது என வும் தம்பலகாமம் பொலிஸார் தெரிவித் தனர்.

# மட்டக்களப்பு பிள்ளையாரடி விஸ்பரூப ஆஞ்சநேயர்

## ஸ்ரீராம நவமி பூசை



மட்டக்களப்பு பிள்ளையாரடி விஸ்பரூப ஆஞ்ச நேயர் ஆலயத்தின் ஸ்ரீராம நவமி விசேட பூசையா னது நாளை புதன்கிழமை மிகச் சிறப்பாக நடை பெறவுள்ளது.

ஆண்டிற்கு ஒரு தடவை இடம்பெறும் இவ் விசேட பூசையானது புதன்கிழமை மாலை 5 மணிக்கு பஜனையுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து சிறப்பு அபிஷேகம் இடம்பெற்று, இராமபிரானுக்கு விசேட தீபாராதனையுடனான பூசைகள் இடம் பெறும்.

# பறங்கியாமடுவில் 43 வீடுகள் அரச அதிபரால் திறந்துவைப்பு

புதுவாழ்வும் புனர்வாழ்வும் அமைப்பினர் மலேசியா தமிழர்பேரவை மற்றும் சர்வதேச மருத்துவ சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரனையோடு பறங்கியாமடுவில் மணல் குடிசைகளில் அடிப்படைவசதிகளற்று வாழ்ந்து வந்த 43 குடும்பங்களுக்கு வீடுகளையும் மலசல கூட மின்னிணைப்பு வாழ்வாதார வசதிகளையும் செய்துகொடுத்துள்ளனர்.

அந்த வீடுகளின் திறப்பு விழா புதுவாழ்வும் புனர்வாழ்வும் அமைப் பின் இலங்கைக்கான தலைவர் எந்திரி ஹென்றி அமல்ராஜ் தலைமை யில் நடைபெற்றது.

விழாவில் புதுவாழ்வும் புனர்வாழ்வும் அமைப்பின் சர்வதேசத் தலைவர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன், காரைதீவு பிரதேச சபைத் தவிசாளர் கி.ஜெயசிறில், கிரான் பிரதேச செயலாளர் ரி.ராஜ்பாபு, உதவிக் கல்விப் பணிப்பாளர், வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்டோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.



# சகோதரனின் தாக்குதலில் சகோதரி சாவு

கற்பிட்டி நுரைச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆலங்குடா முகாமில் சகோதரனின் தாக்குதலுக்குள்ளான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் ஒருவர் புத்தளம் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்த னர். இத்தாக்குதல் சம்பவம் நேற்று முன் தினம் நள்ளிரவு இடம் பெற்றுள்ள தாக நுரைச்சோலை பொலிஸார் தெரி வித்தனர்.

கற்பிட்டி ஆலங்குடா முகாமைச் சேர்ந்த விசேட தேவையுடைய ஜனூல் மரிலியா வயது 43 என்பவரே தனது சகோதரரின் தாக்குதலில் மரணமாகியுள் ளார். சம்பவம் இடம்பெற்ற நேற்றுதினம் இரவு ஒரே வீட்டில் வசித்து வந்த சகோ தரன், தாய் மற்றும் சகோதரிகளுக்கி டையே வாக்குவாதம் இடம்பெற்றுள் ளது.

இதனையடுத்து ஆத்திரமடைந்த குறித்த சகோதரன் தனது 43 வயதுடைய சகோதரியை இரும்புக் கம்பியினால் கடுமையாக தாக்கியதுடன், 32 வயதான மற்றுமொரு சகோதரியையும், தாயை யும் தாக்கியுள்ளார். இந்த தாக்குதலில் 43 வயதாக பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், அவரின் மற் றொரு 32 வயதுடைய சகோதரியும் காயங்களுடன் புத்தளம் ஆதார வைத்தி யசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் குறிப் பிட்டனர்.

அத்துடன் சந்தேக நபரின் தாயும் சிறிய காயங்களுக்கு உள்ளாகியிருந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர் இத்தாக்குதலை நடாத்திய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள் ளார். சம்பவம் இடம் பெற்ற இடத்திற்கு புத்தளம் மாவட்ட நீதிவான் வருகை தந்து நீதிவான் விசாரனையை நடத் திய பின்னர், சடலத்தை பிரேத பரிசோ தனைக்காக புத்தளம் ஆதார வைத்தி யசாலைக்கு கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணை களை நுரைச்சோலை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# இரவில் மனிதர்கள் பயணிக்க முடியாத பிரதேசமாக மாறிவரும் மாவடிப்பள்ளி

அம்பாறை மாவட்டம் காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட் பட்ட காரைதீவு - அம்பாறை பிரதான வீதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் நிர்மாணித்து காரைதீவு பிரதேச சபை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ள தெருவிளக்குகள் இரவு நேரங்களில் குறிப்பிட்ட சில மணித்தி யாலங்கள் ஒளிரவிடப்பட்டு பின்னர் பிந்திய இரவுகளில் மின் துண்டிப்பை மேற்கொள்வதால் இருள் சூழ்ந்து பொதுமக் களும், பாதசாரிகளும் வீதியில் பயணிக்க முடியாத சூழலை ஏற்படுத்துகிறது.

இது தொடர்பில் இதுவரை ஆக்கபூர்வமான எவ்வித செயற்பாடுகளையும் காரைதீவு பிரதேச சபை மேற்கொள்ளாத நிலையில் நேற்றிரவு கட்டாக்காலி மாடுகளில் மோதுண்ட மீன்வியாபாரி பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

யானைகளின் நடமாட்டம், முதலைகள் கரையொதுங்குதல், கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் என மாவடிப்பள்ளி பிரதேசம் இரவில் பயணிக்க முடியாத ஆபத்தான பிரதேசம ாக உள்ளது.

அது மாத்திரமன்றி இருள் சூழ்ந்துள்ளமையால் குறித்த பிரதேசத்தில் பல சட்டவிரோத செயற்பாடுகள் நடைபெற வாய்ப்புள்ளது என மக்கள் அச்சம் வெளியிடுகின்றனர். சில தினங்களுக்கு முன்னர் குறித்த பிரதேசத்தில் உருக்குலைந்த மனித உடல் கண்டுபிடிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆகவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் மற்றும் நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# மண்முனை மேற்கு பிரதேசத்திற்கான முதலாவது ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தின் இவ்வாண்டுக்கான முத லாவது பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் பிரதேசத்திற்கான ஒருங்கிணைப் புக்குழு பிரதி தலைவரும் பொது ஜன பெரமுன கட்சியின் மாவட்ட அமைப்பாள ருமான பா.சந்திரகுமார் தலைமையில் 16 ஆம் திகதி மண்முனை மேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன்போது கடந்த ஆண்டு இப்பிர தேச செயலகப்பிரிவில் மேற்கொள்ளப் பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பா கவும் இவ்வாண்டு நடைமுறைப்படுத்து வதற்காக அனுமதி கிடைக்கப்பெற வேண் டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக வும் ஆராயப்பட்டன.

மேலும் இப்பிரதேசத்தின் பொருளா தாரம், கல்வி, சுகாதாரம், சமுர்த்தி, சுற் றாடல், விவசாயம், குடிதண்ணீர், வன லாகா உட்பட அனைத்துதிணைக்களங்கள் சார் விடயங்களும் ஆராயப்பட்டதுடன் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கைஎடுக்கப்பட்டது.

மண்முனை மேற்கு பிரதேச செயலா ளர் எஸ்.சுதாகர் அவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் உட்பட உதவி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர், சமுர்த்தி தலைமையக முகாமையாளர், மாவட்டத்தின்சகலதிணைக் களங்களின் தலைவர்களும் அதிகாரிக ளும் பிரசன்னமாகியிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘விக்ரம், ராஜன், கங்கு’ ஞாபகார்த்த சுற்றுப்போட்டி: சம்பியனாகியது ஜொலிஸ்ரார்ஸ்..!!







கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தால் வருடந்தோறும் நடாத்தப்படும் ‘விக்ரம், ராஜன், கங்கு’ ஞாபகார்த்த துடுப்பாட்டச் சமரின் 30 ஆவது வருட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் ஜொலிஸ்ரார்ஸ் அணி கிண்ணத்தினை தனதாக்கிக் கொண்டது.

நேற்று முன்தினம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து கிறாஸ் கோப்பர்ஸ் அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கிறாஸ் கோப்பர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார்ஸ் அணி 39.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தாலும் சஜீகனின் நிதானமான ஆட்டமும், கிரிசாந்தின் அதிரடி துடுப்பாட்டமும் கை கொடுத்ததால் 214 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் சஜீகன் 65 ஓட்டங்களையும், கிரிசாந் 55 மற்றும் கல்கோகன் 35 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிராஸ் கோப்பர்ஸ் அணி சார்பில் ஜனந்தன் 5 இலக்குகளையும், அஜித் 2 இலக்குகளையும், கிரிசன் மற்றும் சுஜீபன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிராஸ் கோப்பர்ஸ் அணி 38.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 186 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனால் ஜொலிஸ்ரார்ஸ் அணி 28 ஓட்டங்களால் கிறாஸ் கோப்பர்ஸ் அணியை வீழ்த்தி சம்பியனாகியது. துடுப்பாட்டத்தில் கிறாஸ் கோப்பர்ஸ் அணி சார்பில் அஜித் 38 ஓட்டங்களையும், வரலக்ஷன் 35 ஓட்டங்களையும், டிலோசன் 30 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஜொலிஸ்ரார்ஸ் அணியின் வாமணன் 5 இலக்குகளையும், கிருஷோபன், உமேஷ், பிரசன்னா மற்றும் ஜங்கரன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் வீழ்த்தினர்.

இந்த வெற்றியின் மூலம் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த 30 ஆவது சுற்றுப்போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது ஜொலிஸ்ரார்ஸ் அணி. போட்டியின் ஆட்ட நாயகனாக ஜொலிஸ்ரார்ஸ் அணியின் வாமணனும், தொடராட்ட நாயகனாக கிராஸ்கொப்பர்ஸ் அணியின் அஜித்தும் தெரிவு செய்யப்பட்டனர் .



## மொன்ட் கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் சம்பியனானார் சிட்சிபஸ்!

மொனாக்கோவில் நடைபெற்றுவந்த மொன்ட் கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் கிரேக்கத்தின் சிட்சிபசும், ரஷ்யாவின் அன்ட்ரே ருபெல்வும் மோதியிருந்தனர்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் முதல் செட்டை 6 - 3 என்ற கணக்கில் வெற்றி கொண்ட சிட்சிபஸ், இரண்டாவது செட்டையும் 6 - 3 என்ற கணக்கில் கைப்பற்றி சம்பியன் பட்டத்தை வென்றார். இந்த வெற்றியின் மூலம் சம்பியன் கிண்ணத்தையும் 24.61 லட்சம் யூரோக்கள் பணப்பரிசையும் அவர் சுவீகரித்துக்கொண்டார்.

## சென்னை சூப்பர் கிங்ஸ் பந்துவீச்சில் அபாரம்: 45 ஓட்டங்களால் ராஜஸ்தானை வென்றது..!!



நேற்றையதினம் இடம்பெற்ற ஐ.பி.எல். 2021தொடரின் 12 னிவது போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

மும்பை வான்கடே மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றியடைந்த ராஜஸ்தான் அணி முதலில் சென்னை அணியை துடுப்பெடுத்தாடுவதற்குப் பணித்தது.

இந்நிலையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்னை அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய பஃப் டு பிளசிஸ் அதிரடியாக ஆட மறுபுறம் ருத்ராஜ் ஹெய்க்வாட் பந்துகளை வீணடித்து மந்தமான ஆட்டத்தை வழங்கினார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் இலக்குகள் வீழ்த்தப்பட்ட பின்னர் களமிறங்கிய மத்தியவரிசை, பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களின் பொறுப்பான, அதிரடியான ஆட்டத்தின் மூலம் ஒன்பது இலக்குகளை இழந்து 188 என்கின்ற கௌரவமான ஓட்ட எண்ணிக்கையை சென்னை அணி அடைந்தது.

டு பிளசிஸ் 33, ராயுடு 27, மொயின் அலி 26 மற்றும் பிராவோ அதிரடியாக ஆடி 08 பந்துகளில் 20 ஓட்டங்கள் என தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர். பந்துவீச்சில் சக்காரியா 03 விக்கெட்டுக்களையும், மொறிஸ் 2, ரஹ்மான் மற்றும் திவாட்டியா தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் கைப்பற்றியிருந்தனர்.

189 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியினர் ஆரம்பத்தில் நிதானமாக ஆடினாலும் சென்னை அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் முன்வரிசை வீரர்களின் இலக்குகள் சரிக்கப்பட தொடர்ந்து வந்தவர்களும் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். எனினும் திவாட்டியா, உனட்கட் ஆகியோர் இறுதி நேர அதிரடி ஆட்டத்தின் மூலம் 45ஓட்டங்களால் கௌரவமான தோல்வியை அடைந்தது.

ராஜஸ்தான் அணி சார்பில் அதிகபட்சமாக பட்லர் 49, உனட்கட் 24, திவாட்டியா 20 ஓட்டங்களையும் பெற்றனர். சென்னை அணி சார்பில் மொயின் அலி 07 ஓட்டங்களைக் கொடுத்து 03 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதுடன், ஜடேஜா, சாம் கரன் ஆகியோர் தலா 2, ப்ராவோ மற்றும் தாகூர் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினையும் வீழ்த்தியிருந்தனர். போட்டியின் ஆட்ட நாயகன் விருது பந்து வீச்சு, துடுப்பாட்டம் என இரண்டிலும் சிறப்பாக ஆடி சென்னை அணியின் வெற்றிக்கு வித்திட்ட மொயின் அலிக்கு வழங்கப்பட்டது.





## இன்றைய போட்டி

ஐ.பி.எல்.2021 தொடரின் இன்றைய போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ், மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதவுள்ளன. இதுவரை நடைபெற்று முடிந்திருக்கும் போட்டிகளின் அடிப்படையில் இரு அணிகளும் தலா 3 போட்டிகளில் விளையாடி ஒவ்வொரு தோல்விகளோடு 4 புள்ளிகள் வீதம் பெற்றிருக்கின்றன. ஆயினும், அணிகளுக்கான புள்ளிப் பட்டியலில் ஓட்ட சராசரியின் அடிப்படையில் டெல்லி கப்பிட்டல்ஸ் மூன்றாவது இடத்திலும் மும்பை இந்தியன்ஸ் நான்காமிடத்திலுமுள்ளன.

இவ்விரு அணிகளும் விளையாடும் இன்றைய போட்டி சென்னையில் இலங்கை நேரம் 7.30க்கு ஆரம்பமாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகரிக்காத சீனத் தடுப்பூசியை அரசு தர முயற்சிக்கிறதா?

## சிவாஜிலிங்கம் கேள்வி

உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்படாத சீனத் தடுப்பூசியை அரசு இலங்கை மக்களுக்கு வழங்க முயற்சிக்கிறதா? எனத் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழில் நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மந்த கதியிலேயே நடைபெறுகின்றன.

குறிப்பாக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட மக்களுக்கே தற்போது அதிகமாகத் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இவ்வாறான நிலையில், உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்படாத சீனத் தடுப்பூசியை எங்கள் தலையில் கட்டப்பார்க்கின்றீர்களா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டால், அது சீன தடுப்பூசியாக இருந்தாலும் எந்த தடுப்பூசியாக இருந்தாலும் உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்காத எந்த விடயத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

உலக சுகாதார நிறுவனம் 20 லட்சம் தடுப்பூசிகளை வழங்க முன்வந்துள்ளது. எனவே அனைவருக்கும் தடுப்பூசியை செலுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் வகுக்க வேண்டும்.



சிறிய தொற்று வந்தபோது முழு நாட்டையும் முடக்கினீர்கள். யாழ். குடாநாட்டை முடக்கினீர்கள். தற்போது என்ன செய்துகொண்டு இருக்கின்றீர்கள்?

எனவே உடனடியாக அரசாங்கம் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடின்றி அனைத்து மக்களின் உயிர்களையும் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தடுப்பூசியை செலுத்தும் திட்டத்தை விரைவாகச் செய்யுங்கள். ஏழை மக்களுக்கு இலவசமாகச் செய்யுங்கள், குறைந்த விலையில் தடுப்பூசிகளை வழங்கினாலும் பெரும்பாலான மக்கள் அதனைப் பெற்றுக் கொள்வார்கள். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# திருமதி உலக அழகி கரோலின் ஜூரி சரீரப் பிணையில் நேற்று விடுதலை

திருமதி உலக அழகி கரோலின் ஜூரி மற்றும் மொடல் சூலா பத்மேந்திர ஆகியோர் 10 லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.



இம்மாதம் 05 ஆம் திகதி நடைபெற்ற திருமதி அழகி இறுதிப் போட்டியின் போது இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மூன்று குற்றச்சாட்டுகளின் கீழ் இருவரும் கறுவாத்தோட்டம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்கள்.

கைதுசெய்யப்பட்டு விசாரணைகளின் பின் பொலிஸ் பிணையில் குறித்த இருவரும் விடுவிக்கப்பட்டார்கள்.

இந்நிலையில், நேற்று (திங்கட்கிழமை) கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, திருமதி உலக அழகி கரோலின் ஜூரி மற்றும் மொடல் சூலா பத்மேந்திர ஆகியோர் நேற்று நீதிமன்றில் ஆஜராகிய நிலையில், அவர்கள் இருவரும் 10 லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# துப்பாக்கிகளுடன் ஐவர் கைதாகினர்

சட்ட விரோதமான துப்பாக்கிகளை வைத்திருந்தமை தொடர்பில் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

நாட்டின் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது, சட்ட விரோதமான முறையில் துப்பாக்கிகளை வைத்திருந்தமை தொடர்பில் ஐவர் கைது செய்யப்பட்டுள் ளனர்.

ஹொரவப்பொத்தானை – துட்டுஹேவ பகுதியில் 62 வயதுடை நபரொருவர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், கலவானை – கொஸ்வத்த பகுதியில் துப்பாக்கியுடன் 58 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் மீரிகம – பமுனுவத்த பகுதியில் 31 வயதுடைய நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் அவரிடமிருந்து துப்பாக்கிஒன்றும், 5 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

தினியாவல பகுதியில் 36 வயதுடைய நபரொருவர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், கலஹா – பன்னிலவத்த பகுதியில் குழல் 12 ரக துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்நிலையில் அனுமதி இன்றி எவருமே துப்பாக்கிகளை வைத்திருக்க முடியாது. அவ்வாறு வைத்திருத்தலானது குற்றச்செயற்பாடாகவே கருதப்படும். அதனால் இது தொடர்பில் பொலிஸார் தொடர்ந்தும் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

இதேவேளை, இவ்வாறு சட்டவிரோதமான துப்பாக்கிகளை வைத்திருக்கும் நபர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைக்கப்பெற்றால், அதனை 1997 என்ற இலக்கத்தைத் தொடர்புகொண்டு தெரிவிக்க முடியும். இதன்போது முக்கியமான தகவல்களை வழங்கும் நபர்களுக்குப் பெறுமதிமிக்க சன்மானங்களும் வழங்கப்படும். – என்றார்.

# இலங்கையின் பொருளாதாரம் கறுப்புப் பணமாகும் சாத்தியம்

## எச்சரிக்கிறது முன்னிலை சோசலிசக் கட்சி







கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் இலங்கையின் பொருளாதாரம் கறுப்புப்பணத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமாகக் கருதப்பட வாய்ப்புள்ளது என முன்னிலை சோஷலிசக் கட்சி தலைவர் புபுது ஜாகொட எச்சரிக்கை விடுத்தார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து முன்னிலை சோலிச கட்சியினரால் அமைதிவழி ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கொழும்பு – புதுக்கடை நீதிமன்றத்துக்கு முன்னால் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியவை வருமாறு–

கறுப்புப்பண சுத்திகரிப்பு வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர்கள் பலர் வெளிநாடுகளில் உள்ளனர். இந்நிலையில் கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் இத்தகைய வர்த்தகர்களின் தளமாக துறைமுக நகரம் மாற்றப்படும். இதனால் இலங்கையின் பொருளாதாரம் கறுப்பு பொருளாதாரமாகவே கருதப்படும்.

இதேவேளை, இந்த துறைமுக நகர சட்டமூலத்தின் ஊடாக இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கிடையில் காணப்படும் அதிகாரப் போட்டி மேலும் உக்கிரமடைவதுடன், அதன் காரணமாக நாட்டு மக்கள் பாதிப்புக்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும்.

மேலும் கொழும்பு துறைமுக நகரத்தை சீனாவுக்கு வழங்குவதன் ஊடாக சீனாவின் ஆதிக்கம் நாட்டுக்குள் அதிகரிக்கும். இதனால் இந்நாட்டு தொழிலாளர்களுக்கு காணப்படும் உரிமைகள் ரத்து செய்யப்படவும் வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்தார்.

# 340 கிலோ ஹெரோயினுடன் இலங்கைப் படகு பறிமுதல்

இந்திய போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம் திங்களன்று கொச்சி கடற்பரப்பில் இலங்கை கப்பல் படகொன்றிலிருந்து சுமார் 340 கிலோ ஹெரோயினை பறிமுதல் செய்துள்ளது.



இந்த கடத்தல் தொடர்பாக ஐந்து இலங்கை பிரஜைகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில் ஈரானிய படகிலிருந்து இந்த போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்ட இலங்கை படகிற்கு கைமாற்றப்பட்டுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

ஐந்து பேரின் ஆரம்ப விசாரணையில், இலங்கை படகு சிவப்பு நிற ஈரானிய படகில் இருந்து போதைப் பொருள் சரக்குகளை எடுத்ததாக என்.சி.பி. போதைப் பொருள் சரக்குகளின் நோக்கம் என்.சி.டி தெளிவுபடுத்தவில்லை.படகிலிருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் பெறுமதியானவை. சர்வதேச சந்தையில் 4,375 கோடி இந்திய ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

# இளைஞர் குழு அட்டகாசம் வவுனியாவில் இருவர் காயம்

வவுனியாவில் இளைஞர் குழு ஒன்று வீடு புகுந்து தாக்குதல் மேற்கொண்டமையால் இருவர் காயமடைந்துள்ளமையுடன், குறித்த வீடும் பலத்த சேதத்திற்குள்ளாகியுள்ளது.

நேற்று திங்கட்கிழமை இரவு வவுனியா மகாறம்பைக்குளத்தில் உள்ள வீடொன்றிற்குள் வாள் மற்றும் கத்திகளுடன் உட்புகுந்த குழுவினர் அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் மேற்கொண்டிருந்தனர்.

இத்தாக்குதலில் இருவர் காயமடைந்ததுடன் வீட்டின் பொருள்களும் அடித்து உடைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் குறித்த குழுவும் தப்பிச் சென்றுள்ளது.

மேலும், தாக்குதல் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கியமையை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அவர்கள் கைவிட்டு சென்ற கத்தி ஒன்றையும், தலைக்கவசம் ஒன்றையும் மீட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 905 பேர் கைது

ஏப்ரல் 18 பிற்பகல் 12 மணிமுதல் திங்கள் காலை 6 மணிவரையான 18 மணி நேரக் காலப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக் காக 905 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 6 ஆயிரத்து 898 மோட்டார் வாகன வழக்குகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவற்றுள் அதிகமான வழக்குகள் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோவுடன் தொடர்புடையவை ஆகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.04.2021 இல் வெளியிடப்பெற்றது.